1979 அக்டோபர் 27]

மாண்புமிகு திரு. க. உறொா. எட்மண்ட் ; 1969-ம் ஆண்டு திரு. ஏ. என். சட்டநாதன் தலைமையில் நியமிக்கப்பட்ட முதல் பிற்பட்டோர் நல பரிசீலனைக் குழு ஒரு அறிக்கை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில் ஏறத்தாழ 110 சிபார்சுகளை அவர்கள் செய்திருக்கிறார்கள். பல சிபார்சுகள் இன்றைய தினம் அரசால் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருசில சிபார்சுகள் பொருளாதார நெருக்கடி காரணமாக அல்லது சட்டச் சிக்கல்கள் காரணமாக இன்னும் நிறைவேற்றப்பட முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. சட்டநாதன் குழு தன் அறிக்கையை சமர்ப்பிக்கும்போது பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களின் நிலைமைகளை அறிந்து அவற்றில் சீர்திருத்தம் செய்வதற்கு குறைந்தபட்சம் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை புதிய குழு அமைக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதன் அடிப்படையில் புதிதாக இரண்டாவது பிற்பட்டோர் நலக்குழு அமைப்பதற்கு பிற்பட்டோர் பட்டியலில் இருக்கிற ஒவ்வொரு சமுதாயத்தையும் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்குத்தான் தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தஞ்சை மாவட்டத்தில் நியாய விலைக் கடைகள்.

*வினா எண் 6—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டத்தில் Civil Supplies Corporation மூலமாக எத்தனை நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன, வட்டவாரியாக ?

மாண்புமிகு திரு. க. உறொா. எட்மண்ட் : தஞ்சை மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 1,040 நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்டபடி வட்ட வாரியாக திறக்கப்பட்டுள்ளன:—

வரிசை எண்.	தாலுக்காவின் பெயர்.	திறக்கப்பட்ட நியாயவிலைக் கடைகள்.
(1)	(2)	(3)
1	தஞ்சாவூர்	76
2	ஒரத்தநாடு	42
3	பட்டுக்கோட்டை	48

வரிசை எண்.	தாலூகாவின் பெயர்.	திறக்கப்பட்ட நியாயவிலைக் கடைகள்.
(1)	(2)	(3)
4	பேராவூரணி	17
5	மன்னார்குடி	99
6	திருவாரூர்	64
7	நாகபட்டிணம்	45
8	நன்னிலம்	177
9	சிவகாசி	50
10	மாயவரம்	127
11	கும்பகோணம்	100
12	பாபநாசம்	112
13	திருத்துறைப்பூண்டி	83
	மொத்தம் ..	1,040

திரு. கோ. இளங்கோவன் : இந்த அங்காடிகள் எல்லாம் பெரும்பாலான நேரங்களில் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அதற்குக் காரணம், அங்குள்ள அந்த ஊழியர்களுக்குக் குறைந்த சம்பளம் தரப்படுகிறது என அறிகிறேன். அதை உயர்த்துகிற உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : அங்காடிகள் எதுவும் மூடிக்கிடப்பதாக இத் துறைக்கு எந்தவிதமான தகவலும் இதுவரையிலும் வரவில்லை. ஊதியம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நியாயவிலைக் கடைகளின் மூலம் குறைந்த விலையில் மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வழங்க வேண்டும் என்று உறுப்பினர்கள் விரும்புவார்கள் என்று நம்புகிறேன். அந்தத் துறையில் பணியாற்றுகிற ஊழியர்களுக்குத் தனியார் கடைகளில் கொடுக்கப்படுகிற ஊதியத்தை விட மிக அதிகமான அளவில் கொடுக்கப்படுகிறது என்ற உண்மையை உறுப்பினர் அவர்கள் நிச்சயமாக ஒப்புக்கொள்வார் என்று நான் நம்புகிறேன்.

1979 அக்டோபர் 27]

திரு ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் அரிசி இருந்தால் மண்ணெண்ணை இருக்காது; மண்ணெண்ணை இருந்தால் அரிசி இருக்காது. இப்படிப்பட்ட நிலைமை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அடுத்து மாலை 5 மணிக்கு மேல் கடைகள் மூடப்பட்டு விடுகிறது. பொதுவாக கிராமங்களிலே விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் மாலை 5 மணிக்கு மேல் தான் வருவார்கள். அப்போது இந்தக் கடைகள் மூடிக் கிடக்கும்போது பிரைவேட் கடைகளில் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எனவே இந்த நிலைமையை மாற்றி அமைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. உஸ்ரா எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு துணைபுரிகின்ற வகையில் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த சட்டமன்றம் கூடிய நேரத்திலே இதே துறையைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்திய போது கூடுதல் நேரம் பணி செய்ய வேண்டுமென்று தெரிவித்த போது, அவர்கள் அதற்கு மறுத்த போது, அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்த கட்சி போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்ததை இந்த நேரத்தில் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். பொதுவாக கூடுதல் சம்பளம் கொடுத்தாலும் மக்களுடைய தேவைகளை மனதிலே கொண்டு அவர்கள் பணியாற்ற வேண்டுமென்று நினைத்தால், இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்கலாம். இப்போது 8 மணி நேரம் வேலை செய்கின்ற காரணத்தால், மாலை 5 மணிக்கு கடைகள் மூடக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

திரு கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் ஒரு ஊழியர் இரண்டு கடைகளில் வேலை செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு க. உஸ்ரா. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. ஒரு ஊழியர் இரண்டு கடைகளில் வேலை செய்வதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம், நாள் வாரத்திற்கு 6 நாட்கள் என்பது. அந்த வகையிலே சில ஊழியர்கள் சில கிராமங்களிலே ஒரு இடத்திலே மூன்று நாட்களும், மற்றொரு கிராமத்திலே மூன்று நாட்களுமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, தனியார் கடைகளை நாம் ஆரம்பிக்கின்ற நியாயவிலைக் கடைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. வேலைக்கு நாம் கிராஜுவேட்டு

களைப் போட்டிருக்கிறோம். அந்தக் கடைகளிலே எல்லாம் 2வது 3வது வகுப்பு படித்தவர்கள் வேலை செய்கிறார்கள். எனவே நான் சொல்வதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும். அதாவது ஒரு இன்சென்ட்டிவ் முறையைக் கொண்டு வந்து, அதிகமாக விற்பனை செய்யக் கூடியவர்களுக்கு இன்சன்டிவ்வாகப் பணம் கொடுக்கிறோம் என்று சொன்னால், நேரத்தைப் பார்க்காமல் அவர்கள் அதிக நேரம் வேலை செய்ய முன்வருவார்கள். எனவே, இதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து, இதை அமுலுக்குக் கொண்டுவர முயற்சி எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளில் சாமான் வாங்கும் போது தேவை இல்லாத சாமான்களை வாங்கும்படி கட்டாயப்படுத்து கிறார்கள். இது நிறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையில்லாத சாமான்கள் என்பது உறுப்பினர் அவர்களுக்கு இருக்கலாம். தேவையா, இல்லையா என்பது சாமான்களை வாங்குவோரைப் பொறுத்தது. ஆகவே, உறுப்பினர் அவர்கள் எந்தச் சாமானைப்பற்றிச் சொல்லுகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு செ. சிவசாமி : வாங்குவோரைப்பற்றித்தான் சொல்கிறேன். உதாரணமாக நாம் சீனி கேட்டால், புளியை வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்திக் கொடுக்கிறார்கள். இந்த நிலைமை மாற்றப்படுமா?

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற இப்படிப்பட்ட தவறு எந்தக் கடையில், எந்த ஊரில் நடக்கின்றது என்று சொன்னால், நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதமாகப் போகக் கூடாது என்று சிவசாமி அவர்களுக்குச் சொல்கிறேன். உறுப்பினர் இதைப்பற்றிப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும். அப்போது இந்த அரிய கருத்துக்களைச் சொல்லலாம்.

திரு சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவரவர்களே, இப்போது நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியமான பண்டங்கள் கிடைப்பதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்

1979 அக்டோபர் 27]

அவர்கள் சொன்னார்கள். அதற்கு பதில் இல்லை. குறிப்பாக, புளி மிளகாய் கூட நியாயவிலைக் கடைகளில் கிடைப்பதில்லை. அவைகள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? ஸ்டாண்டர்டு கிளாத் கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா? ஊழியர்கள் சம்மந்தப்பட்ட வரையில் 8 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. கிராமப்புற மக்கள் வந்து வாங்கக்கூடிய வகையில் நேரத்தைத் திருத்தி, மாலை 4 மணியிலிருந்து ஒரு குறிப்பிட்ட நேரம் வரை கடையைத் திறந்து வைப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு வழிவகுக்குமா?

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, அத்தியாவசியப் பண்டங்கள் நியாய விலைக் கடைகளில் கிடைக்கின்றன. சில நேரங்களில் கிடைக்காமல் இருக்கலாம். ஆனால், எந்த நாளும் கிடைக்கவில்லை என்று சொல்வதை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை. விவசாயத் தொழிலாளர்கள் மாலையில் நியாயவிலைக் கடைகளில் சாமான்களை வாங்கும் பொருட்டு ஊழியர்களுடைய வேலை நேரத்தை மாற்றியமைப்பது பற்றிக் கேட்டார்கள். நிச்சயமாக அதைப் பற்றி அரசு யோசிக்கும்.

ஊழியர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளாத நேரத்திலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசுக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

[முற்பகல் 9–30]

அரியலூர் மற்றும் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் நீதிமன்றங்கள் அமைத்தல்.

The Hon. THIRU K. NARAYANASWAMY ; Question No. 7 and 8 may be taken together as they relate to the same subject matter.

*வினா எண் 7 திரு. வெ. கருணாமூர்த்தி: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரியலூரில் சப் கோர்ட் ஒன்றும் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் ''முன்சிப் கோர்ட்'' ஒன்றும் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் தற்போதைய நிலை என்ன?